TIP/SS/01/03 2018.02.15

வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் : 01/2018

சனாதிபதி செயலாளர்,
பிரதமரின் செயலாளர்,
அமைச்சரவையின் செயலாளர்,
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

## சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்கும் திட்டம்

சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை வழங்குவது தொடர்பான வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2016, 2016(I) மற்றும் 01/2016(II) இத்தால் இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

அரசாங்க சேவையில், அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சட்டமுறைச் சபைகளில் சேவையாற்றுகின்ற சிரேஷ்ட தரத்திற்குரிய நிறைவேற்று, நிருவாக, முகாமைத்துவ மற்றும் தொழில்ரீதியான பதவிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு/உள்நாட்டில் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்புடையதாகின்ற ஏற்பாடுகள் இதன்மூலம் விதிக்கப்படுகின்றது.

இந்த அனுமதிப்பத்திரம் மற்றும் அது தொடர்பான வசதிகள் எந்தவொரு விதத்திலும் உரிமையொன்றாக கவனிக்கப்படலாகாது என்பதுடன் அரசாங்கத்தினால் காலத்திற்குக்காலம் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு ஏற்புடையதாகும்.

### 1. உரிமை பெறுகின்ற சந்தர்ப்பங்கள்

அரசாங்க சேவையில், அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சட்டமுறைச் சபைகளில் சிரேஷ்ட தரத்திற்குரிய நிறைவேற்று, நிருவாக, முகாமைத்துவ மற்றும் தொழில்ரீதியான பின்வரும் ஏதேனுமொரு பதவியொன்றில் அல்லது பல பதவிகளில் உரிய செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் அந்தப் பதவிகளில் நிரந்தர சேவைக் காலத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த அனுமதிப்பத்திரம் உரித்தானதாகும்.

1.1 2016.02.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘சிரேஷ்ட நிலை’’ இற்கு உரிய பதவியொன்றில் ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.2 இலங்கைப் பாராளுமன்றத்தில் ‘‘சிரேஷ்ட நிலை’’ இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றில் ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.3 அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அரசாங்க நிறுவனங்களில் (அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்கள் தவிர) ‘‘சிரேஷ்ட நிலை’’ இற்கு உரிய நிறைவேற்றுப்

பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டு ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.4 இலங்கை தரைப்படையின் லெப்டினன்ட் கேர்னல், இலங்கை விமானப்படையின் வின்க் கமாண்டர் மற்றும் இலங்கை கடற்படையின் கமான்டர் பதவி அல்லது அதற்கு மேலுள்ள பதவியொன்றில் ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

1.5 ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள முப்படைகளில் உள்ள வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் சட்டத்தரணிகளாக சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் (இராணுவ பதவியைக் கருதாமல்).

1.6 அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில் அல்லது நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் ‘‘சிரேஷ்ட நிலை’’ இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டு, பன்னிரண்டு (12) வருடங்கள் செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.7 அரசாங்க பல்கலைக்கழகங்களில் கல்விப் பதவியினர்களில் ‘‘சிரேஷ்ட நிலைக்கு’’ உரிய பதவியொன்றிலும் கல்விசாரா பதவியினர்களில் ‘‘சிரேஷ்ட நிலை’’ இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றிலும் ஆறு (06) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள்.

1.8 இலங்கை மத்திய வங்கியில் ‘‘சிரேஷ்ட நிலை’’ இற்கு உரிய நிறைவேற்று பதவியொன்றில் பன்னிரண்டு (12) வருடகால செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

1.9 முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியணிக்குள் உள்ளடங்குகின்ற தகைமைகளைக் கொண்டுள்ள பதவியொன்றில்;

(i) அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியணிக்குள் உள்ளடங்குகின்ற 2016.04.25 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2016 இன் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘சிரேஷ்ட நிலை’’ இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றில் பன்னிரண்டு (12) வருடகால செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும்

(ii) அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியணிக்குள் உள்ளடங்குகின்ற 2016.04.25 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2016 இன் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘சிரேஷ்ட நிலை’’ இற்கு உரிய நிறைவேற்றுப் பதவியொன்றில் ஒன்பது (09) வருட செயலூக்க சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள பட்டயப் பொறியியலாளர்கள், பட்டயக் கணக்காளர்கள் மற்றும் பட்டயக் கட்டிடக் கலைஞர்கள்.

1.10 பல்கலைக்கழக வேந்தர்கள்

1.11 ‘‘பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்’’ பதவியொன்றில் முதலாவது தரத்தில் 06 வருட செயலூக்க சேவைக்காலத்தைக் கொண்டுள்ள பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ‘‘பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள்’’

1.12 அரசாங்கத்தின் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றில் (ஒப்பந்த அடிப்படையிலாவது) ஒன்பது (09) வருட செயலூக்க சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அல்லது கருத்திட்டங்கள் பலவற்றில் சேவையாற்றி மொத்தமாக ஒன்பது (09) வருட செயலூக்க சேவைக்காலத்துடன் (ஒப்பந்த

அடிப்படையிலாவது) தற்போது சேவையாற்றிக் கொண்டிருக்கும் கருத்திட்ட முகாமையாளர்கள், பட்டயப் பொறியியலாளர்கள், பட்டயக் கணக்காளர்கள், பட்டயக் கட்டிடக் கலைஞர்கள் மற்றும் சட்டத்தரணிகள்.

1.13 அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு ஒன்றில் மூன்று (03) வருட செயலூக்க சேவைக்காலத்தைக் கொண்டுள்ள ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள்

## 02. உரிமை பெறாத சந்தர்ப்பங்கள்

இந்தச் சுற்றறிக்கையின் கீழ் பின்வரும் உத்தியோகத்தர் தொகுதிகள் உள்ளடங்கமாட்டாது.

2.1 இந்தச் சுற்றறிக்கை செயல்வலுப்பெறும் திகதியில் ஏதேனும் ஒரு சலுகை ரீதியிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திர திட்டமொன்றின் கீழ் இரண்டு தடவையோ அல்லது அதற்குக் கூடுதலான தடவைகளோ வாகனங்களைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள்.

2.2 சம்பளமற்ற விடுமுறையின் அடிப்படையில் (இதில் 3.4 பிரிவுக்கு உட்பட்டு) விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

2.3 தகைமை பெறுகின்ற பதவியொன்றிற்கு தனிப்பட்ட முறையிலோ மிகை ஊழியர் அடிப்படையிலோ நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.

2.4 அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது நீக்கப்பட்ட பின்னர் தகைமைபெறும் பதவியொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் (மேலே 1.12 பிரிவின்கீழ் வருகின்ற உத்தியோகத்தர்கள் தவிர).

2.5 தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அல்லது அந்தந்த நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிருவாக ஏற்பாடுகள் அல்லது ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஆரம்ப விசாரணைகளோ அல்லது முறையான ஒழுக்காற்று விசாரணைகளோ ஆரம்பிக்கப்பட்டு தற்போது அந்த நடவடிக்கை முடிவுறுத்தப்படாதுள்ள உத்தியோகத்தர்கள்.

2.6 இதற்கு முன்னர் ஏதேனுமொரு சலுகை ரீதியிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திர திட்டமொன்றின் கீழ் மோட்டார் வாகனமொன்றைப் பெற்றிருப்பின் அதனை இறக்குமதி செய்வதற்காக கடன் பத்திரம் ஆரம்பித்த திகதியிலிருந்து/உள்நாட்டில் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனமொன்றை பெறுவதற்காக ஆரம்ப கொடுப்பனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 வருட செயலூக்க சேவைக் காலத்தைக் பூர்த்தி செய்யாதுள்ள உத்தியோகத்தர்கள்.

2.7 முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பதவி எண்ணிக்கைகளுக்குப் புறம்பாக நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பதவியொன்றில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள்.

## 03. நிபந்தனைகள் மற்றும் நியதிகள்

3.1 இந்தத் திட்டத்தின்கீழ் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை தமது சேவைக்காலத்தினுள் அதிகபட்சமாக 02 தடவைகள் மாத்திரமே பெறுவர்.

3.2 சலுகை ரீதியிலான திட்டமொன்றின் கீழ் இதற்கு முன்னர் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரமொன்றைப் பயன்படுத்தியில்லாத சந்தர்ப்பங்களில், அதுபற்றி அனுமதிப்பத்திரம் பெறுநரினால் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் மட்டுமே இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அத்தகைய விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்க முடியும். அவ்வாறு உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அந்த அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தியதாகக் கருதப்படும்.

3.3 இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் மேலே "1.1" முதல் "1.9" வரையான தொகுதிகளின் கீழ் தகைமை பெறுகின்ற பதவிகள் பலவற்றில் சேவைக்காலங்களை ஒன்று சேர்த்து உரிய அனுமதிப்பத்திரத்திற்கான சேவைக்காலத்தை கணக்கிடக்கூடியதாக உள்ள அதேவேளையில்

அவ்வாறான கோரிக்கைகள் உரிய செயலாளர்களின் பரிந்துரைகளுடன் வியாபர மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திற்கு அனுப்பவைக்கப்படுவதுடன் தேவைப்பாட்டுக்கு அமைவாக தீர்மானமொன்றை வழங்குவது அல்லது தேவையேற்படின் இதன் 9.1 பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறிருப்பினும், அரசாங்க அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட முறை நிறுவனமொன்றில் தகைமை பெறுகின்ற பதவியொன்றில் சேவையாற்றி வேறேதேனுமொரு அதற்கு சமமான நிறுவனமொன்றின் பதவியொன்றினை ஏற்பதற்காக அல்லாது வேறேதேனுமொரு தேவைப்பாட்டிற்காக அச்சேவையை இராஜினாமா செய்திருக்கும் அலுவலரொருவர் அல்லது சேவையை விட்டுச் சென்றதன் அடிப்படையில் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள அலுவலரொருவர் மீண்டும் தமைமை பெறுகின்ற பதவியொன்றுக்கு நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வலுவலர் கடமையாற்றிய முந்திய பதவின் சேவைக்காலம்/சேவையை விட்டுச் செல்வதற்கு முன்னுள்ள சேவை காலம் இவ் அனுமதிப்பத்திரத்திற்காக கணக்கிடப்பட மாட்டாது.

3.4 இந்தச் சுற்றறிக்கையில் செயலூக்க சேவைக்காலம் என்பது தகைமைபெறுகின்ற பதவியொன்றிற்காக உத்தியோகத்தரின் சேவைக்காலத்தைக் கணக்கிடும்போது சேவை இடைநிறுத்தத்திற்கு உட்படுவதன் மூலம் அரைச் சம்பளத்திற்கு அல்லது சம்பளமற்ற விடுமுறையைப் பெறுவதன் அடிப்படையில் அல்லது வேறு ஏதேனும் காரணமொன்றின் அடிப்படையில் நியமனம் பின்தேதியிடப்பட்டதன் அடிப்படையிலான காலங்களைக் கைவிட்டு கணக்கிடப்படுகின்ற சேவைக் காலமாகும்.

அவ்வாறிருப்பினும் அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனத்தில் அல்லது நியதிச்சட்ட முறை நிறுவனங்களில் சேவைக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சம்பளமின்றி தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள அரசாங்க, அரசாங்க கூட்டுத்தாபன அல்லது நியதிச்சட்ட முறை நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் சொல்லப்பட்ட சம்பளமற்ற சேவைக் காலமும் செயலூக்க சேவைக்காலத்திற்கு உட்பட்டதாகும். பட்டப்பின்படிப்பு கற்கை நடவடிக்கைகளுக்கான சம்பளமற்ற விடுமுறை, பல்கலைக்கழக பதவியினரின் ஓய்வுக்கான வருடாந்த விடுமுறை, அரைச்சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறை உட்பட பிரசவ விடுமுறை செயலூக்க சேவைக்காலமாக இந்த சுற்றறிக்கையின் தேவைக்காக கணக்கிடப்படுதல் வேண்டும்.

3.5 முன்தேதியிடப்பட்ட காலம் சலுகை ரீதியான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான செயலூக்க சேவைக்காலமாக கணக்கிடப்படாத போதிலும், யாரேனும் ஓர் உத்தியோகத்தரின் முன்தேதியிடப்பட்ட காலத்தினுள் அவருக்கு தகைமை பெறுகின்ற பதவியொன்றின் பதிற்கடமைக்காக முறையான விதத்தில் நியமனம் வழங்கப்பட்டு, அதன் பிரகாரம் சேவையாற்றியிருக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் (நியமன அதிகாரியினால் வழங்கப்படுகின்ற முறையான நியமனக்கடிதம் ஒன்றின மூலம்) மேற்சொன்ன காலம் வாகன அனுமதிப்பத்திர சலுகைக்காகக் கணக்கிட முடியும்.

3.6 மிகை ஊழியர் அடிப்படையிலோ அல்லது பதவியை வகிப்பவர்க்கு தனிப்பட்ட ரீதியிலோ பதவி வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பதவிகளில் மிகை ஊழியர் அடிப்படையில் அல்லது தனிப்பட்ட முறையில் என்பதை நீக்கியுள்ள சந்தர்ப்பமொன்றில் தொடர்புடைய அடிப்படையை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதியல்லாது, அத்தீர்மானம் செயல்வலுப் பெறும் தினத்தை (சாதாரண ஊழியர் அடிப்படைக்கு நியமிக்கப்படுகின்ற தினம்) அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரத்திற்கான சேவைக் காலத்தைக் கணக்கிடுதல் வேண்டும். எவ்வாறிருப்பினும் இந்தக் காலத்தை அனுமதிப்பத்திரத்திற்கான தகைமை பெறுகின்ற பதவியொன்றில் சேவைக்காலத்தைக் கணக்கிடுவதற்கு மாத்திரம் ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் அனுமதிப்பத்திரம் பெறுநர் பல அனுமதிப்பத்திரங்களுக்காக தகைமை பெறக்கூடிய போதிலும், மிகை ஊழியர் அடிப்படையை நீக்கும் தீர்மானம் எடுக்கப்படுகின்ற தினத்தில் செல்லுபடியாகக்கூடிய நிலையில் இருக்கும் சுற்றறிக்கையின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரத்தை மாத்திரமே வழங்குதல் வேண்டும்.

3.7 மேலே 3.6 இன் பிரகாரம் ''தனிப்பட்ட ரீதியில்'' அல்லது ''மிகை ஊழியர் அடிப்படையில'' என்பது நீக்கப்படும்போது தொடர்புடைய அனுமதிப்பத்திரம் பெறுநர் ஓய்வு பெற்றிருந்த போதிலும் அவர் ஓய்வு பெறுகின்ற தினத்தில் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் தகைமை பெற்றிருப்பின் மற்றும் அந்த அலுவலர் தகைமை பெறும் தினத்திற்குப் பின் ஓய்வுபெறும் தினத்திற்கு முன்

அனுமதிப்பத்திர மொன்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இந்தச் சுற்றறிக்கைக்கு சமமான வேறொரு சுற்றறிக்கை செயல்வலுப் பெறும் நிலையில் இருக்குமானால் மாத்திரம் இந்த சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் அவர் இறுதியாக சேவையாற்றிய அமைச்சின் செயலாளரினால் அந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

3.8 இந்த சுற்றறிக்கையின் கீழ் தகைமை பெறுகின்ற ஒருவர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கிடையில் மரணமடைந்தால் கிடைக்கவேண்டிய அனுமதிப்பத்திரத்தை வாழ்க்கைத் துணை அல்லது வாழ்க்கைத் துணை இல்லாத சந்தர்ப்பத்தில் சட்டரீதியான பின்னுரித்தாளர் அல்லது பின்னுரித்தாளர்களினால் விடுக்கப்படுகின்ற வேண்டுகோள் மற்றும் விண்ணப்படிவம் ஆகியவற்றின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். எவ்வாறாயினும் பின்னுரித்தாளர்கள் பலர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் சகல சட்டரீதியான பின்னுரித்தாளர்களினதும் விருப்பம் கிடைக்கப்பெறுகின்ற சட்டரீதியான பின்னுரித்தாளருக்கு மாத்திரமே இதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

3.9 யாரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையொன்றின் தீர்மானம் குறித்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றதன் பின் வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அத்தீர்மானத்தின் மூலம் குறித்த அலுவலர் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை பெருகின்ற நிலையில் இச்சுற்றறிக்கை செயல்வலுப்பெற்றிருக்குமேயானால் அந்த அலுவலருக்கு உரித்தாகின்ற அனுமதிப்பத்திரத்தை நடைமுறையிலுள்ள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

3.10 மேலே 3.5, 3.6, 3.7, 3.8, பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள் விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக தொடர்புடைய செயலாளரின் பரிந்துரை வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வாறான விண்ணப்பங்கள் கிடைக்கும்போது அவை தொடர்பில் மேலும் பரிசீலனைசெய்து தீர்மானமொன்றை வழங்குவதற்கு அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் இதன் 9.1 பிரிவின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## 04. வாகனம் தொடர்பான எல்லைகள்

இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் மூலம் ஏதேனுமொரு சீஜஎப் பெறுமதியுடன் கூடிய (சீஜஎப் பெறுமதியை கவனத்தில் கொள்ளாது) இயைபுமுறை குறியீட்டு இலக்கம் (H.S. Headings) 87.03 அல்லது 87.04 இற்கு உரிய இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யக்கூடிய வயது எல்லைக்கு உள்ளடங்குகின்ற மோட்டார் வாகனம் அல்லது டபள்கெப் வாகனமொன்றினை இறக்குமதி செய்வதற்கு/உள்நாட்டில் பொருத்தப்பட்ட வாகனமொன்றை பெற்றுக் கொள்வதற்கு அனுமதிப்பத்திர பெறுநருக்கு முடியுமானதாக உள்ளது.

## 05. செலுத்த வேண்டிய வரி

இந்தச் சுற்றறிக்கையின் கீழ் அல்லது வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2016 மற்றும் அதற்கான திருத்திய சுற்றறிக்கைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரமொன்றின் மூலம் அலுவலரொருவரினால் மேலே இல. 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள்/கெப் வாகனங்களுக்காக, நிதி அமைச்சரினால் உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய 2058/34 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) வர்த்தமானி அறிவித்தலினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் அது தொடர்பில் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு ஏற்ப விதிக்கப்படும் வரி அளவினை இலங்கை சுங்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

## 06. பதிவுசெய்தல் மற்றும் உரிமை மாற்றல் தொடர்பான நிபந்தனைகள்

### 6.I பதிவு செய்தல்

இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்றை அல்லது வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2016 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரமொன்றின் மூலம் பெறப்படுகின்ற மோட்டார் வாகனத்தை அந்த அனுமதிப்பத்திரம் உரித்தாகின்ற உத்தியோகத்தர் பெயரில் மாத்திரம் பதிவு செய்தல் வேண்டும்.

**6.II உரிமை மாற்றல்**

**6.II.அ.** இச்சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படும் அனுமதிப் பத்திரமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற மோட்டார் வாகனமொன்றை /கெப் வாகனமொன்றை உரிமையாளரின் கோரிக்கையின் பேரில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேறொருவருக்கு மாற்றுவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு முடியும். அதேவேளை, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இல. 01/2016 மற்றும் அதன் திருத்திய சுற்றறிக்கைகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு இச்சுற்றறிக்கைக்கு ஏற்புடைய வரிச் சலுகையின் கீழ் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படும் மோட்டார் வாகனம்/கெப் வாகனத்தின் உரிமையை அதன் உரிமையாளரின் கோரிக்கையின் பேரில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேறொருவருக்கு மாற்றுவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு முடியுமாக உள்ளது.

**6.II.ஆ.** வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இல. 01/2016 மற்றும் அதன் திருத்திய சுற்றறிக்கைகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இல. 01/2016 (II) இல் குறிப்பிடப்பட்டிருந்த வரிச் சலுகையின் பிரகாரம் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படும் மோட்டார் வாகனம்/கெப் வாகனத்தின் உரிமை மாற்றுவது சம்பந்தமாக சுற்றறிக்கை இல. 01/2016 (II) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

**6.II.இ.** வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இல. 01/2016 மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் மூலம் மேற்கூறப்பட்டுள்ள 6.2அ மற்றும் 6.2ஆ பிரிவுகளுக்கு உட்படாத ஏதேனுமொரு வரிச் சலுகையின் கீழ் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனம்/ கெப் வாகனமொன்றின் உரிமையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதன் உரிமையாளரின் கோரிக்கையின் பேரில் வேறொருவருக்கு மாற்றுவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு முடியுமாக உள்ளது.

**07. பிற நிபந்தனைகள் மற்றும் விதிகள்**

i. 2015.11.20 ஆம் திகதிவரை நடைமுறையிலிருந்த 1/2013 சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தின் உரிமை மாற்றுவது சம்பந்தமாக 2014.03.25 ஆம் திகதிய 01/(02)/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் நிபந்தனைகளை (சீஐஎப் பெறுமதியின் 10 சதவீதத்தை மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்) தொடர்ந்தும் ஏற்புடையதாக்கிக்கொள்ளல் வேண்டும்.

ii. அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக உத்தியோகத்தர் தகைமை பெறுகின்றார் என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் வாகனமொன்றைப் பெற்றிருப்பின் அதுதொடர்பாக ஏற்புடையதான சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பது சம்பந்தமாக சட்டரீதியான விதத்திலும் ஒழுக்காற்று ரீதியிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

iii. வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் அதன்கீழ் வாகனமொன்றைப் பெற்றுக்கொள்ளும் வரை செல்லுபடியானதாகும். எவ்வாறாயினும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இச்சுற்றறிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் போது, வாகனமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் அனுமதிப் பத்திரமொன்றைப் தம் வசம் வைத்திருப்பதன் மூலம் ஏற்படுகின்ற சேதம் அல்லது நட்டம் குறித்து பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

iv. பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரமோ அல்லது அதன் வங்கிப் பிரதியோ காணாமல் போயிருப்பின் அனுமதிப்பத்திர பெறுநரினால் உடனடியாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தல் வேண்டும். அதன்பின்னர் அந்த முறைப்பாட்டின் பிரதியொன்றுடன் அந்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யுமாறு விண்ணப்பமொன்றை அனுமதிப்பத்திரத்தை வழங்கிய செயலாளருக்கு வழங்குதல் வேண்டும். அவ்வாறான விண்ணப்பமொன்றைப் பெற்றவுடன் தொடர்புடைய அதிகாரியினால் காணாமல்போன அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து அதுபற்றி சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையார் நாயகம் அவர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். அது நாள் வரை தொடர்புடைய அனுமதிப்பத்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து எழுத்து மூலமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்று இந்தச் சுற்றறிக்கை செயல்வலுப் பெறுமானால் மாத்திரம் மீண்டும் உரிய விதத்தில் விண்ணப்படிவமொன்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அந்த உத்தியோகத்தர்க்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கு தடைகள் கிடையாது.

v. மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அல்லது உள்நாட்டில் பொருத்தப்படுகின்ற வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக அனுமதிப்பத்திரம் பெறுநரின் பெயரிலேயே முறையான விதத்தில் கடன் கடிதத்தைத் திறப்பது அல்லது உள்நாட்டு உற்பத்தி நிறுவனத்திற்கு முறையாக கொடுப்பனவுகளை மேற்கொண்டு அதன் பொருட்டு பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

vi. தாபன விதிக்கோவையின் II இரண்டாவது தொகுதியின் 48 ஆம் அத்தியாயத்தின் I ஆம் அட்டவணையில் உள்ளடங்குகின்ற குற்றத்தின் கீழ் அந்தத் தொகுதியின் 24:3 பிரிவில் குறிப்பிடப்படுகின்ற கடுமையான தண்டனை அல்லது வேறு ஏற்பாடொன்றின் கீழ் அதற்குச் சமனான தண்டனையொன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் குற்றம் புரிந்த தினத்திலிருந்து குறைந்த பட்சம் 05 வருட கால நன்நடத்தையுடனான சேவைக் காலத்தை நிறைவு செய்யும் தினத்திற்குப் பின் இச்சலுகைக்கான தகைமையைப் பெறுவர்.

அதன் பிரகாரம் அத்தகைய அலுவலர்களுக்கான அனுமதிப்பத்திரத்திற்கு தகைமை பெறுகின்ற சேவைக்காலத்ததை கணக்கிடும் போது இச்சுற்றறிக்கையின் 1.1 தொடக்கம் 1.13 வரையிலான பிரிவுகளில் மற்றும் 2.6 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை காலம் கட்டாயமாக பூர்த்தி செய்ய வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக குற்றம் புரிந்த தினத்திலிருந்து நன்நடத்தையுடனான சேவைகாலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**08.** அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பம் செய்யும் நடைமுறை

8.1 இந்தத் திட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் இந்தச் சுற்றறிக்கையின் “இணைப்பு III” இன் கீழ் விண்ணப்பப்படிவத்தின் மூலம் கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (கணனி மயப்படுத்தும் வசதிக்காக விண்ணப்பப் படிவங்களை ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்புதல் வேண்டும்). விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் சட்டரீதியான வெளிப்படுத்தல்களாகக் கருதப்படுகின்றன. அதனால் தெளிவற்ற விதத்தில் தகவல்களை வழங்குதல், விண்ணப்பப்படிவத்தில் நிரப்பவேண்டிய பகுதிகளை விட்டுவிடுதல் மற்றும் பொய்யான தகவல்களை வழங்குதல் ஆகியவற்றின்

அடிப்படையில் அனுமதிப் பத்திரம் தாமதமடைதல் அல்லது கிடைக்காதிருத்தல் குறித்த் முழுமையான பொறுப்பு அனுமதிப்பத்திர விண்ணப்பதாரியினால் ஏற்கப்படுதல் வேண்டும்.

8.2 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து தொடர்புடைய திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) முதற்தடவையாக அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது நியமனக் கடிதம் மற்றும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட கடிதம்.

(ii) இரண்டாவது தடவையாக அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது முதற்தடவை வரிச் சலுகையின் கீழ் பெற்றுக்கொண்ட மோட்டார் வாகனத்திற்காக திறக்கப்பட்ட கடன் கடிதத்தின் நிழற் பிரதி அல்லது உள்நாட்டில் பொருத்தப்பட்ட வாகனமொன்றாக இருப்பின் அதனை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட முதற் கொடுப்பனவுக்குரிய பற்றுச் சீட்டின் நிழற்பிரதி.

(iii) தொலைந்த அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக புதிய அனுமதிப் பத்திரத்திரமொன்றுக்கு விண்ணப்பிக்கும்போது மேற்குறிப்பிட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக தொலைந்து போனதற்காக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதியொன்றையும் அதன் பிரகாரம் தொடர்புடைய அனுமதிப்பத்திரத்தை இல்லாதொழிக்கும் கடிதத்தின் பிரதியும்.

(iv) இந்த சுற்றறிக்கைக்கு மேலதிகமாக தொடர்புடைய விண்ணப்பதாரியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய அனுமதிப்பத்திரத்தை வழங்கும் உத்தியோகத்தர் பொருத்தமானதெனக் கருதுகின்ற எந்தவொரு ஆவணமும்.

(v) விண்ணப்படிவமொன்றைச் சமர்ப்பிக்கும்போது இந்த சலுகையின்கீழ் ஏற்கனவே கொண்டுவரப்பட்ட வாகனம் பற்றி மேலும் பரிசீலனை செய்வது பொருத்தமானது என அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற உத்தியோகத்தர்க்கு தோன்றுமேயானால் அதுபற்றி இலங்கை சுங்கத் திணைக்களத்திலும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் விசாரணை செய்து சான்றுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

8.3 அனுமதிப்பத்திரமானது, அனுமதிப்பத்திரம் பெறுநரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக்கொண்டு வழங்கப்படுகின்றபடியினால், அந்தத் தகவல்களின் உண்மைத் தன்மை பற்றியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதல்ல என்பதையும் உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் மாத்திரமே திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவரினால் விண்ணப்பப்படிவம் பரிந்துரை செய்யப்படவேண்டிய அதேவேளையில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற உத்தியோகத்தரும் அதுபற்றி திருப்திப்படுதல் வேண்டும்.

8.4 இந்தத் திட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக இந்தச் சுற்றறிக்கையின் “இணைப்பு II” மூலம் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் செயலாளர்களுக்கு இதன்மூலம் அதிகாரமளிக்கப்படுகின்றது. அதேபோன்று வழங்கப்படுகின்ற சகல அனுமதிப்பத்திரங்களினதும் பிரதியொன்றை பின்வரும் விதத்தில் தொடர்புடைய கோப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும் அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற சந்தர்ப்பத்திலேயே அனுப்புதல் வேண்டும்.

(i) உத்தியோகத்தரின் பிரத்தியேகக் கோவை
(ii) பணிப்பாளர் நாயகம் - வியாபார மற்றும் முதலீட்டுக்கொள்கை திணைக்களம்
(iii) பணிப்பாளர் நாயகம் - இலங்கை சுங்கத் திணைக்களம்
(iv) ஆணையாளர் நாயகம் - மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்
(v) கணக்காய்வாளர் அதிபதி - கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்

8.5 இந்த சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றின் அடிப்படையில் மோட்டார் வாகனமொன்றைப் பெற்றுக்கொண்டவுடன் அதுதொடர்பான சுங்க குறிப்பேடு (CUSDEC) அல்லது தேசிய ரீதியில் கொள்வனவு செய்யும்போது கிடைக்கின்ற விலைப்பட்டியலின் பிரதியொன்றினை

அனுமதிப்பத்திரம் பெறுநரினால் தனது பிரத்தியேக கோவைக்கு சேர்க்கும்பொருட்டு தனது சேவை நிலையத்திற்கு வழங்கவேண்டிய அதேவேளையில் அதனை பிரத்தியேக கோவையில் சேர்க்கப்பட்டுள்ளதென திணைக்களத் தலைவர் திருப்திப்படுதல் வேண்டும்.

## 09. ஏனைய விடயங்கள்

9.1 இந்தத் திட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுகின்ற பதவி மற்றும் ஏற்பாடுகள் பற்றிய பொருள்கோடல் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படுமானால் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் விசாரித்தல் வேண்டும். அப்போது தொடர்புடைய விடயங்களை பரிசீலனைசெய்து தீர்மானமொன்றை வழங்குவது அல்லது மேலும் தேவைப்படுமானால் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் தலைமையில் இடம்பெறுகின்ற குழுவுக்கு தொடர்புடைய விடயத்தைச் சமர்ப்பித்து இறுதித் தீர்மானமொன்று வழங்குவது மேற்கொள்ளப்படும்.

9.2 இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தகைமை பெறுகின்ற உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்குவது சகல செயலாளர்களதும் பொறுப்பாகும்.

9.3 இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் முறையே இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படுகின்ற வாகனங்கள் சம்பந்தமாக இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் அல்லது உள்நாட்டில் தொடர்புடைய வாகனத்தை வழங்குகின்ற நிறுவனத்தினால் பின்வரும் தகவல்களை மாதாந்தம் அடுத்துவரும் மாதத்தின் முதலிரண்டு வாரங்களுக்குள் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் அரசிறைக்கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) அனுமதிப்பத்திர இலக்கம்
(ii) அனுமதிப்பத்திரம் பெறுநரின் பெயர், பதவி, நிறுவனம் மற்றும் அமைச்சு
(iii) மோட்டார் வாகனத்தின் பெறுமதி
(iv) வரியின் பெறுமதி பற்றிய விபரம் (மொத்த, வெட்டி நீக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட)

9.4 இந்தத் சலுகைத் திட்டத்திற்கு முன்னர் நடைமுறையிலிருந்த இல. 01/2016 கொண்ட வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை, அதற்கான திருத்திய சுற்றறிக்கை மற்றும் இல. 01/2013 கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்திரங்களின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்களில் உள்ள பதிவினை மாற்றுவது தொடர்பான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய வாகனங்களை வேறொருவருக்கு மாற்றுவதற்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தி குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென்பது உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின் அவை தொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு முடியுமாக உள்ளது.

9.5 இதன்கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக தெளிவான தகவல் முறையொன்றை பேணுவதற்காக இந்தத் திட்டத்தின்கீழ் சமர்ப்பிக்கவேண்டிய விண்ணப்பப்படிவம் மற்றும் வழங்கபப்படவேண்டிய அனுமதிப்பத்திரத்தை இலக்கமிடவேண்டிய விதம் “இணைப்பு I” இல் காட்டப்பட்டுள்ளது.

9.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தாம் வகிக்கும் பதவியின் பிரகாரம் வரிச்சலுகையின் கீழ் வாகனமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பொன்றை வழங்குவது அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் வழங்கப்பட்டுள்ள விசேட வரப்பிரசாதமாகும். உத்தியோகத்தரின் தேவைப்பாட்டின் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தின்கீழ் பெறப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தை இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி மற்றுமொருவருக்கு உரிமை மாற்றுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அந்தவிதத்தில் தொடர்புடைய நிபந்தனைகளை மீறாதிருப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநர் கவனம் கொள்ளவேண்டிய அதேவேளையில் அவ்வாறு மீறப்படுகின்ற

சந்தர்ப்பங்களில் காணப்படும் சட்டத்தின்கீழ் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் சலுகை அடிப்படையில் அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி ஏதேனும் முரண்பாடுகள் மேற்கொள்ளப்படுமானால் அதன்மூலம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கத்தைத் தவிர்த்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது இந்த உரிமையைப் பெறுகின்ற சகல அரசாங்க உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும்.

9.7 இந்த சுற்றறிக்கை மற்றும் வரிச் சலுகைகள் 2018.02.16 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறுகின்றது.

**ஓப்பம்./ ஆர்.எச்.எஸ். சமரதுங்க**

**பொதுத் திறைசேரியின் செயலாளர் மற்றும்**

**நிதி அமைச்சின் செயலாளர்**

பிரதிகள்:

| | | | |
|---|---|---|---|
| 01. | கணக்காய்வாளர் அதிபதி | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 02. | மத்திய வங்கியின் ஆளுநர் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 03. | பணிப்பாளர் நாயகம், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | - | மேற்குறிப்பிட்ட விதமாக நடவடிக்கை எடுப்பதற்காக |
| 04. | பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 05. | பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 06. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 07. | பணிப்பாளர் நாயகம், பொதுத் தொழில்முயற்சித் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 08. | ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 09. | ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |
| 10. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | - | தேவையான நடவடிக்கைகளுக்காக |

**இணைப்பு I**

**விண்ணப்படிவம் மற்றும் அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை இலக்கிமிடவேண்டிய முறை**

01. இதன் ‘‘இணைப்பு III’’என தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் ‘‘அ’’ பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவ இலக்கத்தை அனுமதிப்பத்திரத்தை வழங்குகின்ற நிறுவனத்திற்கு விண்ணப்பப்படிவம் கிடைக்கின்ற ஒழுங்குமுறையில் இலக்கமிடவும்.

02. இதன் ‘‘இணைப்பு IV’’ இல் வழங்கவேண்டிய அனுமதிப்பத்திரத்தின் மாதிரி தரப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திர இலக்கம் (Permit Number) தொடர்புடைய அனுமதிப்பத்திரம் வழங்கும்போது பின்வரும் விதமாக சரியாக இலக்கமிடவும்.

03. மேற்குறிப்பிடப்பட்டுள்ள ‘‘அனுமதிப்பத்திர இலக்கம்’’ ஏழு பகுதிகளைக்கொண்டதாகும். அதில் 01,02,03 மற்றும் 05 பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களை மாற்றக்கூடாது. அதேவேளையில் தொடர்புடைய அனுமதிப்பத்திரங்களை வழங்குகின்ற நிறுவனத்தின்மூலம் அந்த இலக்கத்தின் 04,06 மற்றும் 07 ஆகிய பகுதிகளை பின்வரும் விதமாக பூர்த்திசெய்து அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.

**i. நான்காவது பகுதி**

இதன் ‘‘இணைப்பு II’’ இல் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக தமது நிறுவனத்திற்குரிய ‘‘குறியீட்டு இலக்கத்தை’’ சேர்க்கவும்.

> உதாரணமாக: காணி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களில் இந்தக் குறியீட்டு இலக்கம் ‘‘122’’ ஆகும்.

**ii. ஆறாவது பகுதி**

அனுமதிப்பத்திரம் வழங்குகின்ற திகதிக்கு உரிய வருடத்தின் இறுதி இரண்டு இலக்கத்தை இதில் சேர்த்தல் வேண்டும்.

> உதாரணமாக: 2016 ஆம் ஆண்டில் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களில் இந்த இலக்கம் ‘‘16’’ ஆகும். 2018 ஆம் ஆண்டில் ஆயின் அந்த இலக்கம் ‘‘18’’ ஆகும்.

**iii. ஏழாவது பகுதி**

தொடர்புடைய அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்ற ஒழுங்குமுறை (விண்ணப்படிவம் கிடைக்கின்ற ஒழுங்குமுறை அல்ல) பிரகாரம் நான்கு இலக்கங்களைக் கொண்டதாகக் குறிப்பிடவும்.

> உதாரணமாக : முதலாவதாக வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரத்தின் இலக்கம் ‘‘0001’’ ஆகும். ஏழாவது அனுமதிப்பத்திரமாயின் அது ‘‘0007’’ ஆகும்.

04. ஏதேனுமொரு காரணத்தின் அடிப்படையில் ‘‘இணைப்பு II’’ இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயரில் மாற்றங்கள் இருப்பின் (உதாரணமாக: புதிதாக அமைச்சொன்றை ஏற்படுத்துதல், தற்போதிருக்கின்ற நிறுவனங்கள் இரண்டினை அல்லது அதிக எண்ணிக்கையினை ஒன்றுசேர்த்தல் போன்ற) அவ்வாறான சந்தர்ப்பத்தில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு முன்னர் தொடர்புடைய நிறுவனத்தின் தலைவரினால்/தலைவர்களினால் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றினை விடுத்து புதிய ‘‘குறியீட்டு இலக்கத்தை’’ தமது நிறுவனத்தின் பொருட்டு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்றவுடன் தொடர்புடைய மாற்றத்தைக் கவனத்திலெடுத்து திருத்தப்பட்ட ‘‘குறியீட்டு இலக்கத்தை’’ அல்லது புதிய ‘‘குறியீட்டு இலக்கத்தை’’ தொடர்புடைய நிறுவனத்தின் பொருட்டு வழங்கப்படும். அப்போது அப்புதிய இலக்கத்தைப் பயன்படுத்தி உரிய அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.